பார்க்கிறபொழுது, போக்குவரத்து செறிவு மிகக் குறைவாக இருக்கிறது. ஆனால், அதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, 23 கிலோ மீட்டர் சாலையை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகின் மூலமாக எந்தளவுக்கு அகலப்படுத்த முடியுமோ அந்தளவுக்குக் கட்டாயம் அகலப்படுத்தி, செப்பனிடப்படும் என்பதை மீண்டும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)

3. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) பேரவை நிகழ்ச்சிகள் முழுவதையும் நேரடி ஒளிபரப்பு செய்வது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தப் பிரச்சினையைச் சொல்லும்பொழுது, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முழுமையாக Screen-ல் இருந்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அதனை cut பண்ணிவிட்டார்கள் என்று என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தார்கள். நிச்சயமாக 100 சதவிகிதம் அதனை cut செய்யவில்லை. இன்றுதான் Digital House முதன்முதலாக முழுமையாக ஒளிபரப்பு செய்யப்படும் நிகழ்வு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கேள்வியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நீங்கள் பேசும்போது முழுமையாக உங்களுடைய படம் அதில் தெரிந்தது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) Screen-ல் தெரிந்தது. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு ஒளிபரப்பு செய்யப்பட்டது தெரியவில்லை என்று சொன்னால், அதனை நான் சரிசெய்யச் சொல்கிறேன். (குறுக்கீடு) Screen-ல் தெரிந்தது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். நான் சொல்கிறேன். (குறுக்கீடு) அடுத்த நிகழ்வு முடியட்டும்.

4. கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

(ஆ) களியக்காவிளை, அங்கன்வாடி மையம், இடம் மாற்றுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம்

2023 ஏப்ரல் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும் (குறுக்கீடு) போதும். மாண்புமிகு உறுப்பினர், திரு. க. அன்பழகன், உரையை ஆரம்பியுங்கள். (குறுக்கீடுகள்)*

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மானியக் கோரிக்கையின்மீது. . . (குறுக்கீடுகள்)*

3. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஆ) பேரவை நிகழ்ச்சிகள் முழுவதையும் நேரடி ஒளிபரப்பு செய்வது— *தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள், என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஒரு முக்கியமான பிரச்சினைக் குறித்து* Zero Hour*–ல் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்பு கொண்டுவந்தார். அது பாலியல் துன்புறுத்தல் சம்பந்தமான முக்கியமான பிரச்சினை. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், பல சங்கங்கள், பொதுமக்கள் பல்வேறு பிரச்சினைகள் குறித்து கோரிக்கைகளைக் கொடுக்கும்போது, மக்களுக்காக அந்தப் பிரச்சினைகளை அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறார். அப்போது பார்த்தீர்களென்றால், தொடர்ந்து அது* live telecast *ஆகிக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் பேசும்போது* live telecast *ஆகிறது. ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது மட்டும் அதை* cut *செய்கிறார்கள். அது என்னவென்றால், சபாநாயகர் நான் உங்களை சொல்லவில்லை. இங்கே இருக்கிறவர்களில் அது சம்பந்தப்பட்டவர்கள்— எல்லோரும் உங்கள் அறையில் வந்து இதற்கு முன்னர்* complaint *செய்திருக்கிறோம்.—தொடர்ந்து இதை* purpose *ஆக அப்படிச் செய்கிறார்கள். அதற்குப் பின்னர் வருகின்ற கவன ஈர்ப்பு, அது* live telecast *ஆகிறது. (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் அமைதியாக இருங்கள். யாரும் உட்கார்ந்து பேசக் கூடாது. என்னுடைய அனுமதியில்லாமல் யாரும் பேசக் கூடாது, உட்காருங்கள்.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசி முடித்ததற்குப் பிறகு வருகிற கவன ஈர்ப்பு தொடர்ந்து live telecast ஆகிறது. ஆனால், அவர் பேசும்போது மட்டும், purpose ஆக cut ஆகிறது. இப்போது மட்டும் இல்லை, தொடர்ந்து ஆகிறது. இது முக்கியமான பிரச்சினை. பாலியல் துன்புறுத்தல் சம்பந்தமான பிரச்சினை பற்றி நிறைய நிமிடங்கள் அவர் பேசுகிறார். அதை cut செய்திருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட யாரோ ஒருவர் கண்டிப்பாக தவறாக இயக்குகிறார்; அதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதேபோலத்தான், நேற்றையதினம் நான் இங்கே வந்து, சபாநாயகருக்கு வணக்கம் சொல்கிறேன்; அதைத் தப்பாக, அந்த clippings-ஐ மட்டும் கொடுத்து, நேற்று பத்திரிகையிலே, சில தொலைக்காட்சிகளிலே தப்பாகக் கொடுத்திருக்கிறார்கள். நான் எப்போது அவைக்கு வந்தாலும் சபாநாயகர் அவர்களுக்கு வணக்கம் சொல்லி கும்பிடுவது வழக்கம்; அது ஒரு மரபு. அவ்வாறு வணக்கம் சொன்னதை வேறு மாதிரி தப்பாகக் கொடுக்கிறார்கள். இந்த clippings மட்டும் வெளியே போகிறது. தொடர்ந்து இதுபோன்று செய்து கொண்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் யார் என்பதைக் கண்டறிந்து, அவர்கள்மீது உடனடியாக நடவடிக்கை எடுங்கள்.*

பிற்பகல் 12–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். சட்டமன்றப் பேரவைச் செயலாளர் அவர்களிடம், என்ன நடந்திருக்கிறது என்பது பற்றி விசாரிக்கச் சொல்லிவிட்டேன். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்கள் பேசக் கூடாது என்று சொல்கிறீர்களா? உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. காமராஜ், உட்காருங்கள். (குறுக்கீடு)*

திரு. எஸ்.பி. வேலுமணி: *பலமுறை வலியுறுத்தியும் தொடர்ந்து இவ்வாறு (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ், உட்காருங்கள். உங்கள் கொறடா அவர்கள் பேசுகிறார்கள் அல்லவா! உங்கள் கொறடா அவர்களுக்கும், உங்களுக்கும் என்ன பிரச்சினை? ஒன்றும் இல்லையே? (குறுக்கீடு) அவர்களைப் பேச விடுங்கள்.*

2023 ஏப்ரல் 12]

திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, இவ்வாறு தொடர்ந்து நடைபெறுவதால், மக்கள் பிரச்சினை வெளிவராத காரணத்தினால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இன்று வெளிநடப்புச் செய்கிறது.*

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.)

(திரு. மு. ஜெகன் மூர்த்தி அவையிலிருந்து வெளியேறினார்.)

6. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 41-வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

(ஆ) கோரிக்கை எண் 51-இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

} *தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலத்தால் அழிக்க முடியாத, காலத்தால் அழியாத, இன்றும் நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கிற தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் ஆகியோரை போற்றியும், வணங்கியும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு அரசுக் கொறடா அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சியினர் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். கும்பகோணம் தொகுதி, சாக்கோட்டையில் பிறந்த எனக்கு வாக்களித்து,*

தொகுதிக் கோரிக்கைகள்:

அரவக்குறிச்சி தொகுதியிலுள்ள மண் சாலைகளை முற்றிலுமாக தார்ச் சாலைகளாக மாற்றித் தர வேண்டும்.

கரூர்-கோவை தேசிய நெடுஞ்சாலையில் க. பரமத்தியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு பொது மருத்துவமனையாகத் தரமுயர்த்த வேண்டும். மேலும், தென்னிலை பகுதியில் துணை சுகாதார நிலையம் அமைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார் அவர்கள். பின்னால் பேச வருகிறவர்களுக்கெல்லாம் 7 நிமிடங்கள் பேச அனுமதிக்கப்படுகிறது. ஏற்கெனவே, 30 நிமிடங்கள் பேசியிருக்கிறார். (குறுக்கீடு)*

திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படிக்கும்போதும்கூட இவ்வளவு படிக்கவில்லை. இன்றைக்கு நிறைய* prepare *செய்துகொண்டு வந்திருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் சிறிதுநேரம் உட்காருங்கள். ஒரு நிமிடத்தில் சொல்லிவிடுகிறேன்.*

3. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஆ) பேரவை நிகழ்ச்சிகள் முழுவதையும் நேரடி ஒளிபரப்பு செய்வது-*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதாவது, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்* Zero Hour*-ல் பேசியதை* live *ஆக ஒளிபரப்பு செய்யவில்லை என்று மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்கள் அவையில் சொல்லி, அதனால், நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம் என்று சொல்லி, வெளிநடப்பு செய்துவிட்டு வந்தீர்கள். அது உங்கள் உரிமை. ஆனால், என்ன நடந்தது என்பதை அவர்கள் ஏற்கெனவே இங்கே, மைக் இல்லாமல், என்னிடம் சொன்னார்கள். நான் விசாரித்துவிட்டேன்.*

இன்றுவரை, வினாக்கள்-விடைகள் நேரம் நேரடி ஒளிபரப்பு செய்துகொண்டிருக்கிறோம். இன்றுவரைக்கும், அதைத் தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறோம். அதற்குப் பிறகு, இன்று முதற்கட்டமாக, (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள், அவரவர்

இருக்கைகளுக்குச் சென்று உட்காருங்கள். திரு. மார்க்கண்டேயன், உங்கள் இருக்கைக்குச் சென்று உட்காருங்கள். இன்றிலிருந்து agenda-வில் என்ன இருக்கிறதோ, அதையும் பரிட்சார்த்த முறையில் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள், live telecast செய்யுங்கள் என்று சொல்லிவிட்டார்கள். அந்த அடிப்படையில் agenda-வில் எடுத்துக்கொள்ளப்படுவதை மட்டும்—agenda-வில் கவன ஈர்ப்பு என்று எடுத்துக்கொள்கிறோம்.

பிற்பகல் 1–35

இன்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்களும் கவன ஈர்ப்பு கொண்டு வந்தார்கள். அதையும் இன்று நேரடியாக ஒளிபரப்பு செய்தோம். இவ்வாறு படிப்படியாக ஒளிபரப்பு செய்யப்படும். மீதமுள்ள மற்ற அலுவல்களைப் பொறுத்தவரையில், கடந்த காலங்களில் என்ன நடைமுறைகள் பின்பற்றப்பட்டனவோ, அந்த நடைமுறைகள்தான் பின்பற்றப்பட்டு வருகின்றன. சட்டமன்ற நிகழ்வுகளை 100 சதவிகிதம் ஒளிபரப்பு செய்ய வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நோக்கமாகும். படிப்படியாக அனைத்தும் ஒளிபரப்பு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்களுக்கு இதற்குப் பிறகும் என்ன சந்தேகம் உள்ளது?

திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாக்கள்-விடைகள் ஒளிபரப்பு செய்யப்படுகிறது; அதற்குப் பிறகு கவன ஈர்ப்பு ஒளிபரப்பு செய்யப்படுகிறது. நீங்கள் பொதுவாக சொல்வதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மக்கள் பிரச்சினையைப் பற்றி பேசும்போது, அதை மட்டும் cut செய்து, அதற்குப் பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுவது, மற்றவையெல்லாம் ஒளிபரப்பு செய்யப்படுகின்றன. அதைத்தான் நாங்கள் கேட்டோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா, உட்காருங்கள். நான் சொல்கிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள். நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள்; நான் சொல்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித்

தலைவர் அவர்கள் பேசுவது அவசியமானது, அது அவசியம் இல்லை என்று யாரும் சொல்லவில்லை? (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடு) நான் ஏற்கெனவே தெளிவாகச் சொல்லிவிட்டேன். வினாக்கள்-விடைகள் நேரத்தில் என்ன நடந்தாலும் அவை நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படுகின்றன. அதற்குப் பிறகு, agenda-வில் வரக்கூடிய கவன ஈர்ப்பு இன்று முதல் ஒளிபரப்பு செய்யப்படுகின்றது. அதேபோன்று, இங்கு பேசும் மற்ற அனைத்தும் live ஆக screen-ல் வருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. படிப்படியாக விரைவில் ஒளிபரப்பு செய்யப்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார், பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பிரதான எதிர்க்கட்சியாக இருக்கிறது. நான் பேசுவதை ஏன் தடை செய்கிறீர்கள்? இதில் உங்களுக்கு என்ன பிரச்சினை இருக்கிறது என்று எங்களுக்குத் தெரியவில்லை? மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவருக்கு இதில் என்ன ** இருக்கிறது என்று எங்களுக்குத் தெரியவில்லை?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் உட்காருங்கள், நான் சொல்கிறேன். ** என்று சொன்னதை நீக்கிவிடுவோம்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: இதில் உங்களுக்கு என்ன பிரச்சினை இருக்கிறது? பிரதான எதிர்க்கட்சியாக நாங்கள் இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கேள்வி கேட்டிருக்கிறீர்கள். நான் பதில் சொல்கிறேன். (குறுக்கீடு) இல்லை, கேட்டுவிட்டீர்கள்; அதற்கு நான் பதில் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் கேட்டிருக்கிறீர்கள்; அதற்கு நான் பதில் சொல்கிறேன். உங்களுக்குத் தெரியாதது ஒன்றும் இல்லை. நிறைய விஷயங்களை இங்கு வெளிப்படையாகப் பேசுவதற்கு நான் விரும்பவில்லை. கடந்த 10 ஆண்டுக் கால வரலாறை எடுத்துப் பேசுவதற்கு நான் விரும்பவில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், உட்காருங்கள். நான் சொல்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், உட்காருங்கள். நான் சொல்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2023 ஏப்ரல் 12

திரு. எடப்பாடி K. பழனிசாமி: பிறகு, எங்களுக்கு என்ன வேலை இங்கேயிருக்கிறது? தெரியவில்லையே! நாங்கள் பேசுவது வரவில்லையென்றால், எதற்காக இங்கு வந்து உட்கார்ந்திருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர்கள் பேசுவதைக் கேட்பதற்கு நாங்கள் இங்கு வந்து உட்கார்ந்திருக்க வேண்டுமா? ஆளுங்கட்சி பேசுவதை நாங்கள் உட்கார்ந்து கேட்டுவிட்டு போக வேண்டும்; அதுதான் எங்களுடைய வேலை!

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, நீங்கள் உட்காருங்கள்; நான் சொல்கிறேன். (குறுக்கீடு)

திரு. எடப்பாடி K. பழனிசாமி: அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. உட்கார்ந்து கொண்டு யாரும் பேச வேண்டாம். நான் உங்களுக்குத் தேவையான பதிலைச் சொல்கிறேன். நீங்கள் கேள்வி கேட்டுவிட்டீர்கள். நான் சொல்கிற பதிலையும் நீங்கள் கேளுங்கள். (குறுக்கீடு) நான் பதில் சொல்வதையும் நீங்கள் கேட்க வேண்டும். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது உங்களுடைய ஆளுகைக்குட்பட்டது. உங்களிடத்தில்தான் நாங்கள் கேட்கிறோம். ஆளுங்கட்சிக்கு ஒரு நியாயம்; எதிர்க்கட்சிக்கு ஒரு நியாயம் என்ற நிலை இருக்கக் கூடாது. இது அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுடைய உரிமை. அந்த உரிமையை நிலைநாட்டுவது தங்களுடைய கடமை. அதைத்தான் நாங்கள் கேட்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோன்று, ஆளுங்கட்சிக்கு ஒரு நியாயம், எதிர்க்கட்சிக்கு ஒரு நியாயம் என்ற நிலைமை இங்கே இல்லை. இந்த அரசு தேர்தல் அறிக்கையில் சொன்னதை நிறைவேற்றுமோ, நிறைவேற்றவில்லையோ! அதைப் பற்றி நீங்கள் கேள்வி கேட்பது, அதற்கு பதில் சொல்வது ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி பிரச்சினை. இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், படிப்படியாக எவ்வாறு நேரடி ஒளிபரப்பு செய்யலாம் என்பது குறித்து நாங்கள் இங்கே இருந்துகொண்டே நடவடிக்கை எடுக்கவில்லை. பேரவைத்

2023 ஏப்ரல் 12] [பேரவைத் தலைவர்]

தலைவர் என்ற முறையிலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆலோசனையைப் பெற்றும், கேரளா, ஒடிசா, கோவா, டெல்லி போன்ற இந்தியாவிலுள்ள பல மாநிலங்களுக்கு நம்முடைய அதிகாரிகள் சென்று, எந்தெந்த மாநிலங்களில் என்னென்ன நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன என்பது பற்றி ஆய்வு செய்து, அறிக்கைகள் கொடுத்தார்கள். கேரளாவில் வினாக்கள்-விடைகள் மட்டும் ஒளிபரப்பு செய்யப்படுகிறது. ஒடிசாவில் வினாக்கள்-விடைகள் மட்டும் ஒளிபரப்பு செய்யப்படுகிறது. மற்ற நேரங்களில் screen *செய்து, ½ மணி நேரம், ஒரு மணி நேரம் கழித்து, சில நிகழ்வுகளை முன்பு நீங்கள் ஒளிபரப்பு செய்ய என்ன நடைமுறைகளைப் பின்பற்றினீர்களோ, அதே நடைமுறைகளைப் பின்பற்றி ஒளிபரப்பு செய்கிறார்கள். இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, வினாக்கள்-விடைகள், ஆளும்கட்சி, எதிர்க்கட்சி என்று பாராமல் எல்லோருக்கும் சம வாய்ப்புக் கொடுத்து, நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படுகின்றன. இன்று முதல்* agenda*-வில் இருக்கக்கூடியதை, கவன ஈர்ப்புத் தீர்மானத்தையும் ஒளிபரப்பு செய்ய ஆரம்பித்திருக்கிறோம். யார் பேசுகிறீர்கள் என்பதும் இன்று முதல்* live *ஆக* screen*-ல் ஒளிபரப்பு செய்யப்பட்டிருக்கிறது. படிப்படியாக* zero hour *உட்பட அனைத்து நிகழ்வுகளும் நிச்சயமாக ஒளிபரப்பு செய்யப்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார் அவர்கள். (குறுக்கீடு) போதுமே! இனிமேல் இதில் பேசுவதற்கு தேவையிருக்காதே? மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமன்றப் பேரவையின் ஆளுகை தங்களுடைய கட்டுப்பாட்டில் இருக்கிறதா அல்லது முதல்வர் அவர்களுடைய கட்டுப்பாட்டில் இருக்கிறதா?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்னுடைய கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது. நான்தான் இந்த முடிவை எடுத்திருக்கிறேன்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *உங்களுடைய கட்டுப்பாட்டில் இருக்கின்ற காரணத்தினால்தான், சட்டமன்ற உறுப்பினர்களின் உரிமை என்ற அடிப்படையில், எதிர்க்கட்சித் தலைவர் என்ற அடிப்படையில் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். இதில் என்ன சங்கடம் இருக்கின்றது?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், உட்காருங்கள்.*

பிற்பகல் 1–40

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *இல்லை. இதில் உங்களுக்கு என்ன சங்கடம் இருக்கின்றது? ஏனென்றால் நாங்கள் கேள்வி கேட்கின்றோம். கேள்வி கேட்பது வருவதில்லை; பதில் சொல்வது மட்டும்தான் வருகிறது. ஆக, தங்கள் ஆளுகைக்குட்பட்ட இந்தச் சட்டமன்ற வளாகத்தில், சட்டமன்றப் பேரவைக்குள், தாங்கள் எடுக்கின்ற முடிவுதான் இறுதி முடிவு. எனவே, அதில் தாங்கள்தான் நடுநிலையோடு செயல்பட வேண்டும். எங்களுடைய பிரச்சினையைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது எங்களுடைய கடமை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். அதாவது மீண்டும் மீண்டும் இந்த அவை ** நடக்கின்றதா என்ற தவறான குற்றச்சாட்டு, எண்ணத்தோடு சொல்கிறீர்கள். நான் மிகவும் தெளிவாகச் சொல்லிவிட்டேன். ஏற்கெனவே என்னென்ன நடைமுறைகள் பின்பற்றப்பட்டனவோ, அந்த நடைமுறைகள் இதுவரை பின்பற்றப்படுகின்றன. ஏற்கெனவே புதிதாக ஒளிபரப்பு செய்து கொண்டிருக்கிறோம். அதேபோல்,* zero hour*–ம் ஒளிபரப்பு செய்வதற்கு படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதுவரை ஏற்கெனவே இருந்த நடைமுறை என்னவோ, அதுதான் நடைமுறைப்படுத்தப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார் அவர்கள். (குறுக்கீடு) அதில் ஏதாவது சந்தேகம் இருந்தால் நாளைக்கு நான் விவரத்தைத் தருகிறேன். முழுமையாக விசாரித்துவிட்டு விவரத்தைத் தருகிறேன். (குறுக்கீடு) நான் தெளிவாகச் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) இனி, என்னவென்று ஆய்வு செய்துவிட்டு, முழுமையாக விவரங்களை எடுத்து நாளைக்கு அவைக்குத் தருகிறேன். (குறுக்கீடு) நான் அவைக்குத் தருகிறேன். முழுமையாக என்ன நடந்தது என்பதை எடுத்து தருகிறேன். (குறுக்கீடு)* General *ஆக நான் சொல்லியிருக்கிறேன்.* Particular *ஆக நீங்கள் கேளுங்கள்; அதற்கு நான் சொல்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார், பேசுங்கள். (குறுக்கீடு) அதற்காகத்தான் நாளை நான் தெளிவுபடுத்துகிறேன் என்று சொல்கிறேன்.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*